<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

## Commercial OS.No. 81/2020

**PW1 : திரு. ராஜேஷ்குமார், த/பெ. பிரகாஷ் சந்த்**

## 16.08.2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : |

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

<u>(சாட்சியின் தாய்மொழி ஹிந்தி என்பதால், சாட்சிக்கு ஆங்கில மொழி தெரியுமென்பதால், சாட்சியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சொல்லக் கேட்டு தமிழ் மொழியில் பதிவு செய்யப்படுகிறது)</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை எம்கேபி நகரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் வாதி. நான் வாதி தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 26.06.2014 தேதியிட்ட அடைமான பத்திரம் (ஆவண எண். 6583/2014) **வா.த.சா.ஆ.** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 07.08.2006 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் (ஆவண எண். 6329/2006) வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 05.02.2017 தேதியிட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 11.06.2014 தேதியிட்ட வழக்குச்சொத்திற்கான வில்லங்கச்சான்று வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 24.04.2017 தேதியிட்ட இந்நீதிமன்ற CAVEAT 113/2017 ல் எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு மற்றும் மனு சார்வு நகல் வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 30.09.2019 தேதியிட்ட இந்நீதிமன்ற CAVEAT 432/2019 ல் எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு மற்றும் மனு சார்வு நகல் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**தாவா படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. )**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.